**4301**

Register Number | | | | | | |

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகள் வீதம் விடை எழுதுக : 4 × 2 = 8

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

2. ஒறுத்தாரும் பொறுத்தாரும் எய்துவன யாவை ?

3. கிறித்துவ சமயத்தவரின் கலைக்களஞ்சியம் என்று போற்றப்பெறும் நூல் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

4. ஒட்டக்கூத்தர் பெயர்க்காரணம் தருக.

5. பாஞ்சாலி சபதம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

6. 'தம்பிரான் தோழர்' என்று அழைக்கப்பட்டவர் யார் ? காரணம் யாது ?

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக : 3 × 4 = 12

7. இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளை எழுதுக.

8. தலைவியைச் சந்தித்துச் செல்லும் தலைவனிடம் தோழி வரைவு கடாயவாற்றை விளக்குக.

9. வினைத்திட்பத்தின் சிறப்பும், அஃது உடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக.

10. 'உண்டு கொல்' - என்னும் முறையில் கண்ணகி சினந்து கூறியன யாவை ?

11. கோலியாத்தின் இகழ்ச்சி உரைகளையும், சவுல் மன்னனின் அறிக்கையையும் விளக்குக.

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகள் வீதம் விடை எழுதுக: 3 × 4 = 12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்படுவன யாவை ?

13. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை ?

14. உவமைக்கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிடுகிறார் ?

15. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்தமை யாங்ஙனம் ?

16. நயினார் பதத்துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத் தக்கனவாக உமறுப்புலவர் கூறுவன யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** மட்டும் இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் தெரிவித்துள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. இராவணன் வருகையும், அதன்பின் நிகழ்ந்த செயல்களும் குறித்து அனுமன் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

V. பின்வரும் செய்யுளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4 × 1 = 4

20. ''குருகுமுண்டு தான் மணந்த ஞான்றே''

அ) இஃது யார் யாரிடம் கூறிய கூற்று ?

ஆ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

இ) இவ்வரி இடம் பெற்ற நூல் எது ?

ஈ) குருகு - என்பதன் பொருள் யாது ?

*அல்லது*

21. ''நல்லது செய்த லாற்றீராயினும்

அல்லது செய்தல் ஓம்புமின்''

அ) இவ்வரிகளின் பொருள் யாது ?

ஆ) இதனைக் கூறியவர் யார் ?

இ) யாரிடம் கூறுகின்றார் ?

ஈ) இவ்வரிகள் இடம் பெற்ற நூலின் பெயர் யாது ?

VI. 22. 'நண்ணுமிளமை' எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி, அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. 'எழுமை' - எனத் தொடங்கும் குறைளையும் 'நோய்' - என முடியும் குறளையும் அடி பிறழாமல் எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் *இரண்டு* சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) உணர்மின் ஆ) எய்தினன் இ) பூட்டி

ஈ) பெய்த உ) திறந்து ஊ) தோன்றி.

[ Turn over

25. கீழ்க்கோடிட்ட தொடர்களுள் ஏதேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) நல்லாற்றுப் படூஉம் ஆ) முதுமரம்

இ) கூடினர் ஈ) புனைகலம்

உ) விக்கி விக்கி ஊ) வாழிய

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) பெருங்களிறு ஆ) காற்சிலம்பு இ) எண்ணமெல்லாம்

ஈ) ஒன்றென்ப உ) வறுமையுற்று ஊ) வடமேற்கு.

27. பின்வருவனவற்றிற்கு சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

பொதுவியல் திணை அல்லது வரைவுகடாதல் துறையை விளக்குக.

28. ''அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை 1 × 4 = 4

இகழ்வார்ப் பொறுத்தல் தலை''

- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

***அல்லது***

சொற்பொருட் பின்வருநிலையணி *அல்லது* எடுத்துக்காட்டு உவமையணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 29. சுவடி | — | சிக்கனம் |
| 30. வெய்யோன் | — | உள்ளம் |
| 31. செட்டு | — | கதிரவன் |
| 32. சிந்தை | — | அறியாமை |
| | — | நூல். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16 × 1 = 16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்

அ) நக்கீரர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

34. அகநானூறு மணி மிடைப்பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

அ) 100

ஆ) 120

இ) 180.

35. நற்றிணையைத் தொகுப்பித்தவன்

அ) ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

ஆ) ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்

இ) பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி.

36. கொண்டாடப்பெறும் திருவள்ளுவராண்டின்படி அவர் வாழ்ந்த காலம்

அ) கி. மு. 31

ஆ) கி. பி. 31

இ) கி. மு. 18.

37. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு

அ) படலம்

ஆ) இயல்

இ) காதை.

38. சிறியதிருவடி என்று அழைக்கப்படுபவர்

அ) கருடன்

ஆ) அனுமன்

இ) வீடணன்.

39. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

அ) சதுரகராதி

ஆ) பேரகராதி

இ) அரும்பத அகராதி.

40. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர்

அ) சூசைமாமுனிவர்

ஆ) இயேசு பெருமான்

இ) தாவீதன்.

41. 'திவ்வியகவி' என்ற பெயரால் அழைக்கப்படுபவர்

அ) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) குமரகுருபரர்.

42. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

அ) நகைச்சுவை நூல்

ஆ) நன்கு கட்டப்பட்டது

இ) அறிவுரை நூல்.

43. முக்கூடற் பள்ளுக்குரிய பாவகை

அ) சிந்துப்பா

ஆ) ஆசிரியப்பா

இ) வஞ்சிப்பா.

44. சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற நூல்

அ) பிசிராந்தையார்

ஆ) பாண்டியன் பரிசு

இ) குடும்ப விளக்கு.

45. வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி

ஆ) வியாசர்

இ) காளிதாசர்.

46. ''நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்'' என்று பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) வாணிதாசன்

இ) பாரதியார்.

47. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ''தமிழன்னை விருது'' பெற்ற கவிஞர்

அ) அப்துல் ரகுமான்

ஆ) சுரதா

இ) தாரா பாரதி.

48. சின்னச் சீறா என்ற நூலை எழுதியவர்

அ) உமறுப்புலவர்

ஆ) குணங்குடி மஸ்தான்

இ) பனு அகுமது மரைக்காயர்.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : 2 + 2 = 4

49. உதவி வரைத்தன் ................ உதவி

செயப்பட்டார் ................ வரைத்து.

50. எண்பொருள வாகச் செலச் சொல்லித் ................

நுண் பொருள் ................ தறிவு.